# துருவன்

## ஒரு புராண நாடகம்

ஸ்ரீமான். கிருஷ்ணஸ்வாமி சர்மா
இயற்றியது.

'சுதேசமித்திரன்' ஆபீஸாரால்
பிரசுரிக்கப்பட்டது

சென்னை:
'தாத்தா' பிரிண்டிங் ஒர்க்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

காபி ரைட்]

1920

[விலை அணா 5

குறிப்பு :—

உத்தானபாதன் இளைய மனைவிக்குச் சுருசி என்றும் சுருதி என்றும் பெயருண்டு. சுருதி என்பது சாதாரணமாக வழங்கும் பெயர். சுருசி என்பது வடசொல். வழங்கும் பெயரையே யாம் ஈண்டு அமைத்தோம். இதைத் தமிழுலகினர் பிழை கூறாரென நம்புகிறேன்.

கி. சர்மன்.

This drama should not be staged without permission of the Author.

நூலாசிரியர் உத்திரவின்றி இந்நாடகத்தை நடித்தல் கூடாது.

# நாடக பாத்திரங்கள்.

உத்தானபாதன் ... அயோத்திமன்னன். சுவாயம்பு மனுவின் குமாரன்.

மதிமுகி ... ... அயோத்தி அமைச்சன்.

துருவன் ... உத்தானபாதன் மகன்—சுநீதியிடம் பிறந்தவன்.

வசிஷ்டர் ... குலகுரு.

நாரதன் ... ... திரிலோக சஞ்சாரி.

இந்திரன் ... தேவர்களுக்கரசன்.

ஸ்ரீமந்நாராயணன் ... பகவான்.

வஜ்ஜிரதந்தன் ... பூதராஜன்.

சோமசர்மன், நித்யானந்தன் ... இரு பிராமணர்கள்.

சுநீதி ... }
சுருதி ... } உத்தானபாதன் இருமனைவியர்கள்.

சீடர், சேவகர், சேடியர் முதலானோர்

நாடகம் நிகழிடம்—அயோத்திநகர், வனம்.

# துருவன்

## முதல் அங்கம்.

### முதற் காட்சி.

[அயோத்திநகர்—அத்தாணி மண்டபம்.]

(கொலு விருக்கை.)

உத் :—மதிமுகி ! நம் குடிகள் துஷ்ட மிருகங்களால் உபத்திரவமின்றி சந்தோஷத்துடன் வாழ்கின்றனரல்லவா ? தவசிகளுக்கு அசுரர்களால் ஏதேனும் தீங்கு உண்டாகின்றதா ? மாதவர்களின் ஜபதபங்கள் விக்கினமின்றி நிறைவேறுகின்றனவா ? வர்ணாஸ்ரமத்திற்குக் குறைவின்றி அவரவர்கள் தம் தம் கடமைகளைச் செய்கின்றனரல்லவா ?

மதி:—வேந்தே! சூரிய குலத்துதிக்கும் மன்னர்களின் ஆட்சி முறையில் நீதியும் சந்தோஷமும் சமாதானமும் இல்லாமலிருக்குமா?

உத்:—மந்திரி! யானைக்கும் அடிசருக்கும் என்பதையறியாயோ. நம்மை யறியாமலே குற்றம் ஏதாகிலும் உண்டாகக்கூடும்.

மதி:—மன்ன! சாட்சாத் சுவாயம்புமனுவின் தவக்குமாரர் நீதிமுறை வழுவதுமுண்டோ. தர்மம் வழுவாது குடிகளைக்காப்பதே விரதமாகக் கொண்டவர்களல்லவோ. அற்ப உயிர்களுக்குத் தம் அரும் உயிரைக் கொடுத்துதவும் காருண்யவள்ளல்களல்லவோ?

உத்:—மந்திரி! இராஜ்யத்தை ஆளும் வேந்தன் ஒருவன் கீழுள்ளவர்கள் மதிக்குறைவினால் ஏதாகிலும் குடிகளை வருத்தக்கூடும். குடிகள் அதனால் துன்பம் உறுவர். குடிகளின் கண்ணீர் செங்கோலை யழிக்குமென்பது பெரியார் கூற்றல்லவா? ஏழையழுத கண்ணீர் கூறிய வாளொக்கும் என்பதில்லையா?

மதி:—மன்னர் பெருமானே! அரசன் எவ்வழிசெல்கிறானோ அவ்வழியையே மற்றுள்ளவர்களும் பற்றுவர். மன்னன் நீதி முறை கடக்கின் குடிகளும் கடப்பர். மன்னன் தர்மம் வழுவாதவனாயின் குடிகளும் தர்மத்தைக் கடக்கார்.

உத்:—என்பாலுள்ள பிரீதியால் இவ்வாறு நீ கூறுகின்றனை போலும்!

மதி :—இறைவா ! கிருதயுகத்தில் முகஸ்துதி செய்வாரு முண்டோ ? தர்மதேவதை நான்கு பாதங்களுடன் நடமாடும் காலமன்றோ இது. துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ் செய்து ஆணை வழி நிற்றலால் ஒரு துறையில் பசுவும் புலியும் நீர் அருந்துகின்றதல்லவா ? வேந்தே உங்கள் இராச்சியத்தில்,

அத்திராதிகளாற் சாக்காடில்லை வாளரியால் மானைச்
சத்துருவில்லை வேங்கை யாவொடு மானைச்சார்ந்து
மித்திரமாகு நீரா னெருப்பினல் வீவோரில்லை
புத்திரர் மரணங்காண்பா ரில்லையிப் புவனத்தெங்கும்.
நோயுறுவார்களில்லை நோயுறு மூத்தோருக்குக்
காயும்வெங் கூற்றமில்லைக் கணவனை யிழப்போரில்லை
வாயுவுமுட லுக்கின்ப மாகவந் தசையா நிற்கும்
ஆயிழையார்களெல்லா மாண்மகப் பெறுகின்றூர்கள்.

உத் :—மந்திரி ! உன்போலிய மதிமந்திரிகள் முக்காலத்தையுமுணர்ந்து கூற எனக்கிருக்க, தர்மமும் குறையுமோ நீதியும் வழுவுமோ.

மதி :—வேந்தே ! மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல் என்பது உண்மையாயினும் அக்குணம் அரசன் ஆணைவழி நிற்றலால் உண்டாவதன்றி வேறல்ல ; அரசனானவன் உலகத்திற்கு அன்பிற் சிறந்த தாய்போலத்தோன்றி மன்னுயிர் யாவையுந் தன்னுயிர்போலக் கருதி,

‘ மாநிலங் காவலனென்பான் மன்னுயிர்க்காக்குங் காலை
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வராலுயிர் தம்மால்
ஆன பயமைந் துந்தீர்த்தறங் காப்பானல்லனோ ’

என்ற வண்ணம் தன்னாலாவது தன் பரிசனத்தா லாவது, பகைவர்களாலாவது, திருடர்களாலாவது, மற்ற உயிர்களாலாவது சிறிதுங் கொலை, களவு, கர்ப்பனை முதலாகிய உபத்திரவம் அணுகாமல் குடிகளுக்கு க்ஷேமமுண்டாகும்படி மனு முறை தவறாது செங்கோல் செலுத்தி பிரஜைகளிடத்திற் கடுஞ்சொற் சொல்லாமலும், கடுந் தண்டம் விதி யாமலும் அவரவர் தாரதம்மியமறிந்து பட்ச பாதமில்லாமல் தயையாய்ப் பரிபாலனஞ் செய்கின் றதை மறக்கலாகாதன்றோ ?

' குடிபுறங் காத்தோம்பிக் குற்றங்கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில் '

உத் :—மதிமுகி ! நன் குரைத்தனை. வேதத்திற்கும் தர்மத்திற்குங் காரணமாகி நிற்பது அரசன் செங் கோலன்றோ ? கற்புடைய பெண்டிர்கள், குரு குலச்சிடர்கள், முற்றுந்துறந்த முனிவர்கள், யா வரும் மதிக்கப் பிரகாசிப்பது செங்கோன்மையின் சிறப்பினாலன்றோ. அரசன் முறை தவறி நடந் தால் நம்மைக் கேட்பவன் யார். நமக்கெதிர் ஒரு வருமில்லை. நாம் அடித்தது ஆட்டம். பிடித்தது பெண்டு என்று கர்வித்தால் கேடு வருவது நிச் சயம். தெய்வம் ஒருக்கால் பொறுத்தாலும் பூமி பொறுக்காதே. அண்டமிடிந்து தலை மேல் விழு மல்லவா. அரசன் நெருப்பாறும் மயிர்ப்பாலமு மாக நடக்க வேண்டும். மழையை ஆதாரமாக நோக்கியிருக்கும் பயிர் போல, குடிகள் தமக்கா

தாரமாகச் செங்கோலையே நோக்கியிருத்தலால் அரசன் நீதி பிசகாது நடக்க வேண்டுமல்லவா.

மதி :—அரசே! வாஸ்தவம். என்றாலும் அரசனுக்குற்ற துணைவன் அமைச்சனே. கருவியும் காலமும் செய்கையும் தொழிலும் இவற்றை யெண்ண வல்லவன் மந்திரியல்லவா. பிரித்தலும், காத்தலும், பிரிந்தவரைப் பொருந்தச் செய்தலும் வல்லமையுடையவன் மந்திரியன்றோ. செங்கோன்மையைப் பலப்படுத்தும் கடமை மந்திரியைச் சேர்ந்ததே. அரசனுக்குத் தீங்கு செய்யும் மந்திரியொருவனே எழுபது கோடி பகைவரிலுங் கொடியன் என்பது பெரியார் கூற்றல்லவா?

உத் :—மந்திரி! குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்பவைகளால் வரும் தகுதி வேறுபாடுகளை யறிந்து சொல்பவரே மந்திரி. மதிமுகி! என்ன வாஸ்தவந்தானே.

மதி :—சூரிய குலாதிப! வாஸ்தவமே.

(சேவகன் ஒருவன் வருதல்)

(சேவகனைப் பார்த்து) என்ன விசேஷம்.

சேவ :—சுவாமி! நமது ஆசார வாசலில் தவமுனிவர் ஒருவர் தமது சிஷ்ய குழாங்களுடன் வந்திருக்கிறார்.

மதி :—சேவகா! அத்தவமுனிவர் யாவரென்பதை நீ யறியாயா.

சேவ :—ஆம். அறிவேன்.

மதி :—அறிவாயாகில் கூறு.

சேவ:—நமது குலகுரு வசிஷ்ட மாமுனி.

மதி:—நம் குல குருவா—நல்லது. (அரசனைப்பார்த்து) இறைவ! நமது குலகுரு வசிஷ்ட மாமுனி சிஷ்ய வர்க்கங்களுடன் வந்திருக்கிறாராம்.

உத்:—மந்திரி! நல்லது. இன்று நம் குரு இங்கேயே பிக்ஷை எடுத்துக்கொள்வர். அவர் பிக்ஷைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வாய். துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் அரசன் அல்லவோ துணைவன். இன்று நல்ல சுதினமல்லவா.

மதி:—ஆம். இந்நாள் மிக்க நன்னாள்.

(வசிஷ்டர் முதலானோர் பிரவேசித்தல்.)

உத்:—(எதிர்கொண்டு) குருநாதா சரணம் (வணங்குதல்)

வசி:—தீர்காயுஷ் மான்பவ! உத்தானபாதா! க்ஷேமமா? உன் குடிகள் யாவரும் க்ஷேமமா? உன் பரிசனங்கள் அனைவரும் க்ஷேமமா?

உத்:—தவத்தார் ஆசியும் ஆதரவும் உற்றவிடத்து க்ஷேமத்திற்குக் குறைவு வருமா. குரு திலகா! நாழிகை ஆய்விட்டது. பிக்ஷைக்கு எழுந்தருளலாமே.

வசி:—அரசனே! பிக்ஷைக்கு அழைக்கிறாயோ—நல்லது—உன் பாலன் துருவன் சுகமேயன்றே.

உத்:—(ஆத்மகதமாய்) ஐயோ! துருவனைப்பற்றி குரு கேட்கிறாரே. அவன் தாயைப்பற்றியும் கேட்பாரோ. என்ன மனக்கலக்கம். (பகிரங்கமாக) குரு மூர்த்தி! துருவன் தங்கள் ஆசீர்வாதத்தால் சுக

மே. (மந்திரியைப் பார்த்து) மதிமுகி! சிஷ்ய குழாங்களுக்கு அன்னமளிக்க ஏற்பாடு செய். சுவாமி. போவோமா.

வசி:—நல்லது. செல்வோம். சிஷ்யர்களே வாருங்கள்.
(அனைவரும் நிஷ்கிரமித்தல்)

(காட்சி முடிவு)

---

## இரண்டாங் காட்சி.

[அரண்மனையிலோர் அறை]

(சுநீதியும்—பாங்கியும் இருத்தல்)

சுநீதி புலம்புதல்.

அன்னேயோ வையாவோ வாருயிர்த் தோழிமீர்காள்
தன்னேரிலாத வென்றி உத்தானபாதர் செய்த
இன்னாத விச்செயலைக் கேட்டபோ தென்படுதீர்
என்னே ரிவ்வுலகத்தில் யானே விங் கினைபடுவேன்.

பய்யார்வெம் பணத்துலகிற் பழியாலே பழிமறைத்து
நெய்யாலே நெருப்பவிக்க நீணிலத்திற் கண்டறியேன்.

... ... ... ... ...

மண்பிறந்த பின்பிறந்த மறிகடல்சூழ் வையகத்தும்
பெண்பிறந்தார் யான்பட்ட பெருந்துயர மார்பட்டார்.

பெண் ஜென்மம் கடைபட்ட ஜென்மம் என்பது என்னளவில் பிரத்யட்சமாயிற்றே. சமுத்திரம் போல வற்றாத செல்வத்திற் பிறந்தும், மண்டலம் யாவையும் ஆக்ஞா சக்கரத்தினால் வயப்படுத்தும் சார்வ பௌமனு

க்கு மனைவியாயிருந்தும், கொடுத்துவைக்காத பாவியானேன். ஐயோ! யான் ஏன் பிறந்திருக்கவேண்டும்? பிறவாதிருந்தால் இத்துன்பம் உண்டாகாதிருக்குமே. முதல் மனைவி தர்ம பத்தினியாயிற்றே. அக்கினி சாட்சியாக, அனைவரும் அறிய மணந்துகொண்ட என்னைப் புறக்கணித்தாரே. மனைவியானவள் சகலவித பூஷணங்களைத் துறந்திருந்தாலும் மாங்கலிய சூத்திரத்தை மாத்திரம் துறக்கக்கூடாதது போல, தந்தை தாய் முதலிய பந்துக்களையெல்லாம் விட்டுப் பிரிந்தாலும் கொண்ட கணவனைமட்டும் பிரிந்திருக்கலாகாதென்று தர்ம சாஸ்திரம் முறையிடுகின்றதே. மரக்கலத்தை ஆதாரவாகக்கொண்டு கடற்கரை பெறுகின்றவர்களைப் போல, மனைவியொருவள் இல் வாழ்க்கைக்குப் புருஷனைக்கொண்டு குடும்ப அறங்களைச் செய்து புகழ்பெற வாழ வேண்டுமன்றோ. ஐயோ! முதல் மனைவி குரூபியானாலும் அவளன்றோ சகலத்திற்கும் உரியவள். மற்றவள் வைப்புக்குச் சமமன்றோ. அன்புக்கு சுருதியும் துன்புக்கு சுநீதியுமா? ஆ! தெய்வமே. யான் இப்படியிருப்பது உன் திருவுளச் சம்மதமோ. சகீ! என் துன்பம் யாருக்கேனும் உண்டோ.

**சகீ:**—அம்மா! யான் என்ன சொல்லப்போகிறேன். உமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. விதியைக் கடப்பாருமுண்டோ. 'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்.' ஊழ்வினை இப்படியாயின் அதற்கு யாம் என் செய்வது. வருத்தமுறுதீர்கள். தாயே!

**சுநீதி:**—சகீ! வருத்தமில்லாமல் இருக்க முடியுமா. என்

நிலைமையிலுள்ளவர்கள் உயிரையும் மாய்த்துக் கொள்வார்களே. ஐயோ ! தற்கொலை தர்ம சாஸ்திர விருத்தமென்றிருக்கிறேன். இல்லாவிடில் என் உயிர் இதுகாறும் நிலைத்திருக்குமா.

**சகீ** :—அம்மா ! எண்ணுதகெல்லாம் எண்ணி எண்ணி ஏங்காதீர்கள். நாளைக்கே உங்களுக்கு நற்காலம் உண்டாகும். முன்னாளில் மாதர்கள் பலர் உம் மைப்போல் வருந்தினதை யறியீரோ.

இன்பத்திலிறுமாந்து தோனுேக்கி யீன்றமத
துன்பத்தி லமுழுந்துவார் தொல்லுலகி லறியாதார்
இன்பத்துன்பங்களே யெய்தியபோ திவையெல்லாம்
முன்பற்று விடாத வினைப்பயனென்பார் முழுதுணர்ந்தோர்.

சாட்சாத் இலட்சுமி சகல ஐஸ்வர்யத்துடனிருந் தும் தம் நாயகராகிய ஸ்ரீமந் நாராயணனைப் பிரிந் திருக்கவில்லையா ? சங்கார மூர்த்தியாகிய சிவ பெருமானைப் பார்வதி தேவியார் சில காலம் விட் டுப் பிரிந்திருக்கவில்லையா ? சகல அண்டங்களையும் படைத்த நான்முகனைச் சகல கலாவல்லி என்னும் நாமம் பூண்ட சரஸ்வதி விட்டுப் பிரிந்திருக்க வில்லையா ? எண்ணிலா ரிஷி பத்தினிகள் அரக்கர் களால் துன்புறவில்லையா ? இதெல்லாம் பகவத் ஸங்கல்பமன்றோ.

தன்னேரிலாத வரிச்சந்திரன் றன் மைந்தனையும்
மின்னேரிலாத விடை மெல்லியளையும் விட்டு
முன்னே செய் விதியாலே முடைப்பறையற் காளாகி
என்னேதா னிடுகாடு காத்து நிலையிருந்தான்.

பத்தினிப் பெண்டிர்கள் பெருந்துயர் உறுவது வினைப்பயனே. யானை, பாம்பு, பட்சி இவை மனிதர்களிடம் சிறைபடுவதும், சந்திர சூரியர்கள் இராகு கேதுகளால் பீடிக்கப்படுவதும், மகா புத்திமான்களான வித்வான்கள் தரித்திரத்தினால் பீடிக்கப்படுவதும், கற்புள்ள மங்கையர் கஷ்டப்படுவதுமான இவையாவையுமறிந்தால் விதியை விட பலமான வஸ்து வேறொன்றுமில்லை என்பது உண்மையல்லவா. என் தாயே!

சுநீதி:--வாஸ்தவமே! என்றாலும் பெண் புத்தி பேதமையுடைத்தன்றோ? கஷ்டம் வரும் காலத்திலன்றோ உணர்வு தடுமாறும். அறிவு ஒடுங்கும். என்னைப் பற்றிய விசாரம் எனக்கு அவ்வளவில்லை. என் மகன் துருவனைப்பற்றித் தான் என் மனம் உருகுகிறது. ஊருக்கு உயர்ந்தவனைப் பாராளும் வேந்தனை இளவரசபட்டம் பெற்றுப் புகழோடு துருவன் வாழ்வான் என்றிருந்த என்னை இப்படித் தெய்வம் சோதித்ததே. ஆ! மகனே! துருவா! நீ ஏன் என் மகனைப் பிறந்தாய். இன்னும் யார் வயிற்றிலாவது பிறந்திருந்தால் குறைவின்றி வாழ்வாயே. ஐயோ!

சகி:—அம்மணி! இதென்ன போங்கள்—துருவனைப் பற்றிய விசாரம் உங்களுக்கேன். அவனுக்கு ஒரு குறையும் உண்டாகாது. இன்று கஷ்டப்படுபவர் நாளைச் சுகமெய்துவர். சுகமும் கஷ்டமும் ஒருவர் பங்கல்ல. துயரொழியுங்கள்.

**சுநீதி:**—என் பிரிய சகியே! கொண்ட கணவன் காதலியைப் புறக்கணித்தலைக் கேட்டிருக்கிறேன். குழந்தைகளை வேறுபடுத்தியிருப்பதை யான் இதுகாறும் கேட்டிலேன். இதை நினைக்க நினைக்கத் துயர் உண்டாகின்றதம்மா. என்ன தான் இளையவள் மீது அன்பு பெருகி மோகங் கொண்டிருந்தாலும் பெற்ற பிள்ளையை இப்படியும் உல்லங்கனஞ் செய்யலாமா? அப்பா துருவா! உன் தந்தையார் இப்படியும் உன்னை நேசிக்காமலிருப்பார் என்று கனவிலும் நான் கருதவில்லையே. காக்கைக் குந்தன் குஞ்சு பொன் குஞ்சல்லவா? அற்ப உயிர்களெல்லாம் தங்கள் குட்டிக் குஞ்சுகளைப் பட்சமாய்ப் பாதுகாக்கின்றனவே. அவ்வளவு பட்சங்கூட அறிவுள்ள மனிதர்களிடத்தில் காணவில்லையே. தெய்வமே! எங்களுக்கு நீயே கதி.

**சகி:**—தாயே! பத்திரைமாற்றுத் தங்கம்போலத் தேஜோமயமாய் விளங்கும் பாலனுக்கு இடர் ஒன்றும் வராதம்மா. உங்கள் முன்பாகத்தானே அன்று நம் குலகுரு துருவனைப்பற்றிக் கூறியது. துருவன் ஜாதகம் நல்லா யோக ஜாதகம் என்று ஜோதிடர் கூறியிருப்பதை யான் கேட்டிருக்கிறேன். அவனையன்றி அயோத்திக்கு வேறு அரசனும் வருவனோ. குடிகள் தாம் ஒப்புவரோ. குடிகளுக்குக் கண்ணுங் கருத்துமாகயிருக்கும் துருவனை யார் என்னசெய்ய முடியும். பொறுத்தார் பூமியாள்வார் என்பதை நீங்கள் அறியாததா? தாயே! கவலையற்றிருங்கள். துன்பத்தை யொழியுங்கள்.

சுநீதி:—சகி! என் துயரத்தை நன்மொழிகளால் மாற்றும் உனக்கு யான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்.

சகீ:—தாயே! கஷ்டம் வருங்காலத்து அவரை விட்டுப் பிரிவதும் சுகம் வந்த காலத்து அவருடன் வந்து கலப்பதுமா சிநேகம். அம்மணீ! உங்கள் மனம் அமைதிப்பட சற்றே நந்தவனஞ் சென்று வருவோம். வாருங்களம்மா.

சுநீதி:—எனக்கு அமைதியும் உண்டாகுமோ. எல்லா வியாதிக்கும் மருந்துண்டு இம்மனோ வியாதிக்கு மருந்தில்லை என்பதை நீ கேட்டதில்லையா. கஷ்டம் நீங்கினாலன்றி மனதிற்கு அமைதி உண்டாகாதம்மா. என் சகி!

சகீ:—அப்படியல்ல அம்மணீ! மன அமைதியற்ற காலத்து, கண் காட்சி சற்றே இன்பத்தைக் கொடுக்குமன்றோ? இப்பொழுது நல்ல மந்த மாருதம் வீசுகின்றது. புஷ்பங்கள் நன்றாய் மலர்ந்திருக்கின்றன. பட்சி சாலங்கள் ஒன்றோடொன்று கூடிக் குலாவுகின்றன. சக்கரவாகம் பக்கத்திற் புக்கி விளையாடுகின்றது. மயிலினங்கள் தோகைகளை விரித்தாடுகின்றன. குயிலினங்கள் இனிய இசையுடன் கூவுகின்றன. தாயே! வாருங்கள். சற்றே என் வார்த்தையைத் தட்டாதீர்கள்.

சுநீதி:—என் சகி! உன் வார்த்தையைத் தட்டுவதா. ஆபத்து காலத்தில் ஆருயிர்த் தோழியன்றோ நீ.

உன் வார்த்தையை ஒருநாளும் தட்டேன். உன் மனப்படி வருகிறேன். எல்லாம் ஈசன் செயல்.

(இருவரும் நிஷ்கிரமித்தல்)

(காட்சி முடிவு)

## மூன்றுங் காட்சி.

### [அரண்மனைப் போது மண்டபம்]

உத்தான பாதன் சுருதி மகனை மடி மீது வைத்து ஆசனத்திலிருத்தலும் சுருதி மன்னவன் பக்கலில் நிற்றலும்.

**சுருதி:**—காந்தா! எவ்வளவு ஆநந்தமாய் உட்கார்ந்திருக்கிறான் பார்த்தீர்களா. இளவரச பட்டம் பெற மணிமுடி சூடும் நிலைமையில் உட்கார்ந்திருக்கிறான். என்ன கம்பீரம். ஆ! (பாலனைப்பார்த்து) பாலா!

**உத்:**—பிரியே! உனக்கென்ன பைத்தியம். சதா சர்வ காலமும் பட்டத்திலேயேயிருக்கிறாய். முடி சூடுவதற்கு யுக்த வயது வேண்டாமா. பெரியோர்கள் சம்மதம் வேண்டாமா.

**சுருதி:**—நம் பிள்ளைக்கு முடிசூட்ட வயதென்ன-பெரியோர் சம்மதம் என்ன? துருவனிடத்தில் காட்டும் அன்பு (மகனைச் சுட்டிக் காட்டி) இவனிடத்தில் காட்டக் கூடாதா? இவன் உங்கள் பிள்ளையல்லவா? அதேன் அப்படியிருக்கிறீர்கள்.

**உத்:**—பெண்ணே! இதென்ன விந்தை. நீ கூறுவது

யாவும் நிந்தையாகவேயிருக்கிறது. என் அன்பிற்கு இருவரும் சமமுடையவர்களல்லவோ ?

சுருதி:—அதெப்படி. சுநீதி மகனைக் காட்டிலும் சுருதி மகன் உயர்ந்தவனல்லவா ? (மகனைச் சுட்டிக் காட்டி) இவன் உங்கள் மனமுகந்த காதலி சுருதி பெற்றெடுத்தவனல்லவா ? உங்கள் அன்பிற்குகந்த ஆணங்கு சுருதி ஈன்ற தவப்புதல்வனல்லவா ? சுருதி மகன் உயர்ந்தவனே. ஆயிரந்தரம் சொல்வேன். அதற்கென்ன சந்தேகம்.

உத்:—என் கண்மணி ! இப்படியெல்லாம் வேற்றுமை காட்டாதே. உயர் குலத்தாருக்கு அதிலும் சூரிய வம்சத்திற்கு இது அழகல்ல. வேற்றுமை உட்பகையை மூட்டும்.

சுருதி:—மூத்தாள் பகை என்னை என்ன செய்யும்? என்னிடத்தில் அவள் பகைத்தால் அவளுக்கே கெடுதி நிச்சயம். எதற்காக அவள் என் மீது பகைப்பது. அவள் பிறந்தகத்துச் சொத்தைக்கவர்ந்தேனா ? அவள் உற்றார் பெற்றாருக்குத் தீங்கிழைத்தேனா ? இதற்கெல்லாம் நீங்களே காரணம்.

உத்:—காதலி ! யான் என்ன காரணம். வீணில் ஏன் என் மீது பழி சுமத்துகிறாய் ? உனக்கேன் இவ்வளவு கோபம்.

சுருதி:—அவளுக்கு நீங்கள் இவ்வளவு தூரம் இடங் கொடுத்ததினாலன்றோ ? அவள் என்னைத் தூற்றுகிறாள். உங்கள் வஞ்சகம் யானறிவேன்.

**உத்:**—கண்ணே! அப்படியல்ல; யான் உன்னை வஞ்சிப்பேனு?

**சுருதி:**—வஞ்சிக்காமற்படிக்கென்ன; இது வஞ்சனையல்லவா? உன்னையன்றி அவளை அன்புடன் நேசிக்கேன் என்று கூறினீர்களே—இப்பொழுது அவளுக்குப் பரிந்து பேசுகிறீர்களே. இதென்ன.

**உத்:**—காதலி! அவளைப்பற்றி உன்னிடம் பேசவுங் கூடாதா.

**சுருதி:**—நீங்கள் எப்படி பேசக்கூடும். எனக்கு இஷ்டமில்லாதவளைப்பற்றிப் பேசினுல் அது எனக்குத் திருப்தியைத் தராதென்பதை நீங்கள் அறியமாட்டீர்களோ? எனக்குத் தெரியும். நீங்கள் கள்ள வேஷம் போடுகிறீர்கள்.

**உத்:**—பிரியே! எனக்கு அவளும் ஒரு காலத்தில் இஷ்டமுள்ளவளாகத் தானேயிருந்தாள். இதில் என்ன கள்ள வேஷம்.

**சுருதி:**—நன்ருகத் தான் சொல்லுங்களேன்—அவள் பேரிலேயே இஷ்டம் என்று.

**உத்:**—அப்படியுண்டா—உன் மீதுள்ள இஷ்டத்திற்கு மிஞ்சியா? காதலி!

**சுருதி:**—இதெல்லாம் முடியாது. கோமுட்டி கதை என்னிடம் வேண்டாம். என்னிடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டு தான். என்னிடம் அன்பு வைத்தால் அவளிடம் அன்பு வைக்கக் கூடாது.

அவளிடத்திலும் அன்பு வைப்பதாயிருந்தால் அவளிடமே நீங்கள் போய்ச்சேருங்கள். நான் என் பிறந்தகம் போய்ச் சேருகிறேன். (முகத்தைச் சுளித்துக் கொள்ளுதல்)

உத்:—இதென்ன முரட்டுத்தனம். உன்னிடமே எனக்கு அன்பு. நான் உன் ஸ்வாதீனமல்லவா? எனக்கு வேறெவரிடத்தும் அன்பு கிடையாது. சுநீதியை என் பழிக்கிறாய்? அவள் தனியாகத் தானேயிருக்கிறாள். உன்னிடத்திலுண்டாகிய அன்பினாலன்றோ அவளைத் துன்புக்கு இடமாக்கினேன்.

சுருதி:—என் மேல் வைத்த அன்பினாலா அவளுக்குத் துன்பு செய்கிறீர்கள். இவ்வார்த்தை உங்களுக்கு அடுக்காது. சூரிய குலத்தரசர்களுக்கு இது நியாயமல்ல. ஸ்திரீகளின் மீது குற்றங் கூறுவதே புருஷர்களுக்குக் கடமையாயிற்று.

உத்:—ஸ்திரீகளினால் புருஷர்கள் படும்பாடு சொல்ல முடியாதே. ஸ்திரீயின்பொருட்டு திரிமூர்த்திகளும் கஷ்டப்பட்டனர். தவமுனிவர்கள் துயரெய்தினர். மன்னர் பலர் இடர் கொண்டனர். புருஷர்களுக்குக் கஷ்டம் ஸ்திரீகளாலேயே உண்டாகிறது.

சுருதி:--ஸ்திரீகளாலேயே கஷ்டம் உண்டாவதானால் ஏன் விவாகஞ் செய்து கொள்ளுகிறீர்கள். சிலர் மூன்று நான்கு கலியாணஞ் செய்து கொள்ளுகிறார்கள். சிலர் ஸ்திரீ சபலம் குறைவின்றிச் சாகுந் தருவாயிலுங் கலியாணஞ் செய்து கொள்ளுகிறார்கள்.

புருஷர்கள் இப்படியெல்லாம் ஸ்திரீகளைச் சந்தி சிரிக்க வைத்து விட்டுக் கடைசியில் ஸ்திரீகளின் மீது பழி சுமத்துகிறது.

உத்:—(புன்னகையுடன்) கண்ணே! ஏது வீண் வாதஞ் செய்கிறாய்.

சுருதி:—உள்ளதைச் சொன்னால் யாருக்கும் கோபந்தான் வரும். புருஷர்கள் எதைச் சொன்னாலும் ஸ்திரீகள் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஸ்திரீகள் தப்பித் தவறி பதில் ஒன்று சொல்லி விட்டாலோ உடனே—அப்பா—அவளா—பெரிய ரீலி, தாடகி, சூர்ப்பனகி என்கிறார்கள். ஸ்திரீகளுக்குச் சுதந்தரம் எங்கிருக்கிறது.

உத்:—ஸ்திரீகளுக்குச் சுதந்தரமுங் கொடுத்து விட்டாலோ கேட்க வேண்டியதேயில்லை. பிரபஞ்சத்திற்கு வேறே பிரளயம் வேண்டுவதில்லை.

சுருதி:—பிரபஞ்சத்திற்குப் பிரளயம் ஸ்திரீ தானே. வாஸ்தவம். உங்களுக்கென்ன வேலை. எப்பொழுதும் வல்லடி வழக்குதானே.

(துருவன் குதித்துக் குதித்து உத்தானபாதனிடம் வந்து அவர் துடை மீது உட்காரப்போதல்)

துரு:—அப்பா! (துடைமீது தொத்திக்கொண்டு உட்கார முயலல்.)

உத்:—வா! என் மகனே!

சுருதி:—(துருவன் கையைப்பிடித்துக் கீழேவிடுதல்) அடே! துருவா! உனக்குத் துஷ்டத்தனம் மட்டும் இன்

னும் போகவில்லையே. கொஞ்சமேனும் பயமில்லாமல் உட்காரப்போகிருய்.

துரு:—சிற்றன்னையே! எங்கள் அப்பா மடிமீது உட்காருவதற்கு ஏன் பயப்படவேண்டும். யான் ஒன்றுந் துஷ்டத்தனஞ் செய்யவில்லையே.

சுருதி:—மன்னன் துடைமீது உட்காருவதற்கு என் பாலன் இருக்க நீ எப்படி உட்காரக் கூடும்.

துரு:—அன்னையாரே! யானும் அவருக்குப் பிள்ளை தானே. நீங்கள் எனக்குத் தாயல்லவா.

சுருதி:—நீ அவருக்குப் பிள்ளையானல் என்ன. உதவாப்பிள்ளை நீ.

துரு:—அம்மா! பிள்ளையில் உதவும் பிள்ளை உதவாப் பிள்ளையு முண்டோ? பிள்ளையிடத்தில் தகப்பனுக்கு வாஞ்சைவிடுமோ. தாயே! இயற்கையால் உண்டாகக்கூடிய மணமன்றோ இது. (பாடுதல்.)

சுருதி:—உன் தாய் யானல்ல. உனக்குத் தாய் யான் எப்படி யாவேன். உன் தாய் அங்கு யிருக்கிருள்.

துரு:—தாயே! நீங்கள் வேறு அவள் வேறு என்பது எனக்கில்லை. என் தந்தையாருக்கு நீங்களும் பத்தினியாகையால் எனக்குத் தாய் முறையல்லவா? உங்கள் மகனுக்குச் சுதந்தரம் இருப்பது போல் எனக்குமுண்டல்லவா? (பாடுதல்)

சுருதி:—அடே துருவா! உனக்குச் சுதந்தரம் ஒரு

கேடா. அயோத்திநகரை யாள என் மகன் இருக்க உனக்கு என்னடாவுண்டு போ.

துரு:—தாயே! அயோத்திநகரை என் தம்பியே யாளட்டும். எனக்கு ரொம்ப சந்தோஷம். என் தாய்க்கும் மெத்த சந்தோஷம்.

சுருதி:—உன் சந்தோஷத்தை யார்கேட்கிறார். உன் தாயைப்பற்றி எனக்கென்ன. பட்டமகிஷி நான் இருக்கிறேன்.

துரு:—எங்களன்னையும் ஒருகாலத்தில் பட்டமகிஷியாகத்தானே யிருந்தாள். தாயே! இது யாருக்கு சாஸ்வதம். உயர்ந்தன தாழும் தாழ்வன உயரும் என்பது சாஸ்திரமல்லவா?

சுருதி:—துருவா! மெத்த படித்தவன் போல் பேசுகிறாய். போ. நீ அனுதை. உன் தாயிடம் செல். நீ கிட்ட வருவதற்குக்கூட அந்தஸ்து யில்லை. நீ மிஞ்சிப் போனாய். (பாடுதல்)

துரு:—(மிக்க விசனத்துடன் ஒரு புறமாக.) ஐயோ! சிற்றன்னை கூறும்படுமொழிக்கு இடங்கொடுத்து வாய்பேசாமல் மௌனம் சாதித்தவண்ணம் இருக்கிறரே தந்தையார். உலகெலாம் ஆளும் பார்த்திபனை ஒரு ஸ்திரீ ஆள்கின்றாளல்லவா? ஆ! ஹா! ஸ்திரீகளின் சாகஸமே சாகஸம். ஆ! சிற்றன்னையார் கூறின வார்த்தை என் மனதைப் பிளக்கின்றது. கேவலம் ஒரு ஸ்திரீ என்னை அவமானப்படுத்துங்

காலமும் வந்ததல்லவா? க்ஷத்திரிய குலத்திற் பிறந்து சுவாயம்பு மனுவின் பேரனுயிருக்கும் என்னை அவமானப் படுத்தினளே. மானமன்றோ மனிதர்களுக்குப் பெரிது. மானமழிய வாழ்வதி லும் சாவது நலம். சாண் பிள்ளையானலும் ஆண் பிள்ளையல்லவா. தெய்வமே! உன் கிருபாகடாட் சம் இருந்தால் இவ்வற்ப அந்தஸ்தைவிட யாவருக் கும் கிட்டாத அந்தஸ்து பெற்றுவருவேன். இது சத்தியம். (அழுத கண்ணீருடன் நிஷ்கிரமித்தல்)

சுருதி:—பார்த்தீர்களா! சுநீதி மகனின் தைரியத்தை. எவ்வளவு அடங்காப் பிடாரித்தனம். தாயைக் கொள்ளும் பிள்ளை என்பது பொய்யாகுமா?

உத்:—ஜகதீசா! என்ன காரியம் செய்தோம். என் அருமை மைந்தனைத் திரஸ்கரித்த பாவியானே னே. சிற்றன்னையின் கடுமொழி சகியாது சென் ருனே. அவன் மனம் என்ன துடித்ததோ. உரத்த சப்தத்தைக் கேட்டலறும் பாலன் இக்கடுமொழி யைச் சகிப்பனே. இடிவிழுந்த நாகம்போல் ஆயி னனே. (சுருதியைப் பார்த்து) ஆ! பெண்ணே. தூற்றும் பெண்டிர் கூற்றுக்குச் சமம் என்பதை உன்னிடத்தில் காண்கிறேன். உன்னலல்லவோ இவ்வளவு துயரத்திற்குக் காரணம். சுநீதி நல்ல குணவதியாயிற்றே. அவளுக்கு இடர் விளைத் தேனே. துருவா! உன் குணத்தை யறியாப் பாவியானேன். ஆ! தெய்வமே.

(ஆசனத்தில் உட்கார்ந்தவண்ணம் சோகித்தல்)

சுருதி :—கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோலா யிற்றே.

உலர்ந்தது நாவுயிரோடலற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் பொடித்த பொங்குசோரி
சலந்தலைமிக்க தக்கதென்கொ லென்றென்
றலந்தலை யுற்மவரும் புலன்களைந்தும்.

இப்படியெல்லாம் வரும் என்று நான் கனவிலுங் கருதவில்லையே. நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததே. ஐயோ ! நாதா ! நாதா !! நாதா !!!

(ஸ்தம்பித்து நிற்றல்)

காட்சி முடிவு

# இரண்டாம் அங்கம்.

## முதற் காட்சி.

[சுநீதியின் அந்தப்புரம்]

(அழுத கண்ணீருடன் துருவன் வரவைச் சகிக்கமாட்டாமல் சுநீதி எதிர்கொண்டு கிலேசப்படுதல்.)

சுநீதி:—அப்பா குழந்தாய்! என் கண்மணி! ஏன் வாட்ட முற்றிருக்கின்றாய். முகப்பொலிவு ஏன் குறைந்திருக்கின்றது. கண்களில் நீர் ததும்பு வானேன். கன்னங்கள் அழுக்கடைந் திருப்பா னேன். ஐயோ! உன் உதடு துடிக்கின்றதே. புருவங்கள் குமுறுகின்றனவே. அங்கம் நடுக்க முறுகின்றது. துருவா! உனக்கு என்ன நேர்ந் தது. எவரேனும் வைதனரா, அடித்தனரா அல் லது பொல்லாங்கு இழைத்தனரா! என் முத்தே! உனக்குற்ற துயர் என்ன? வாடா என் மகனே.

(அணைத்து உச்சி மோர்தல்)

துரு:—தாயே!.........(கண்ணீர் விடல்)

சுநீதி:—ஐயோ! துருவா. இதென்ன கோலம். உன் னையே பிரபஞ்சமாகக் கருதியிருக்கும் எனக்கு ஆறுதல் என்ன? நான் துன்புறுங் காலையில் அம்மா

17C240

துன்புறுதீர்கள் என்று உன் நயன மொழிகளால் என் செவிக்கு இன்பம் அளித்து இடர் நீக்குவாயே. உன் கனிவாய்கொண்டு அன்புடன் என்னுடன் உரையாடாயா? என் கண்மணி! அடே!! என் செல்வமே!!! உன் தகப்பனுருக்குத்தான் யான் ஆகாதவளானேன். உனக்கும் யான் ஆகாதவளானேனு. நீ என்னுடன் உரையாடாயா? ஆ! துருவா (அழுதல்)

C-, 2 MK

துரு:—அன்னுய்! துயரொழியுங்கள். உங்களுக்கு வீண் கலக்கத்தை யுண்டுபண்ணினேன். அம்மா அழாதீர்கள். (தாயின் கண்ணீரைத் துடைத்தல்)

சுநீதி:—மகனே! உனக்கு நேர்ந்த தென்னப்பா.

துரு:—தாயே! சிற்றன்னையார் என் அருமைத் தந்தையார் மடிமீது உட்காருவதற்கு அந்தஸ்து இல்லை எனக் கூறினுரம்மா.

சுநீதி:—என் கண்மணி! நீ சுநீதிவயிற்றில் பிறந்தவனல்லவா? உனக்கு அந்தஸ்து எப்படி யுண்டாகும் அப்பா. சுருதி வயிற்றிற் பிறந்த பிள்ளைக்கல்லவோ அந்தஸ்து. மகனே! இதற்காகவா வருந்துகிறுய். அதை விட்டொழி. (ஆத்மகதமாய்) ஐயோ! பாலன் மனம்கசியும்படி என்ன வார்த்தை கூறினுளோ. அனலிற் பட்ட புழுப்போல் துடிக்கிருனே. குழந்தை மனந்துடிக்க இப்படியும் பேசுவளோ ஒரு பெண்பிள்ளை. ஏ! ஜெகதீசா. இதுவும் உன் திருவருளோ.

**துரு** :—தாயே! என்னை யறியாமலே எனக்குத் துக்கம் வருகின்றதே. சிற்றன்னை கூறின கடுமொழி நாராசம் காய்ச்சி என் நெடுச்செவியில் ஊற்றினாற் போலிருக்கின்றதே. மானம் பெரிதல்லவா. அம்மா! ‘தீயினாற் சுட்டபுண் உள்ளாறு மாறாதே நாவினாற் சுட்ட வடு.’

**சுநீதி** :—தனயா! நம் கஷ்டகாலம் இப்படியெல்லாம் வருத்துகிறது. அவள் கடக்கிறாள்போ. அவள் வார்த்தையைப் பெரிதாகவெண்ணி மனங்கலங் காதே. கண்மணி!

‘சூழ்வினை நான்முகத் தொருவர்ச் சூழினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ’

**துரு** :—அம்மா! ‘மருந்தோ மற்றானோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை பீடழியவந்தவிடத்து’. மான மழிய வந்தபோது உடலைக் காப்பாற்றும் வாழ் வானது இறவாமைக்கு மருந்தாமோ. தாயே! ஒரு காசுக்குப் போனமானம் ஆயிரம்பொன் கொடுத்தா லும் திரும்பிவருமோ. தாயே! தகப்பனார் துடை மீது உட்காரும் அந்தஸ்தையும் அதற்கு மேலான அந்தஸ்தையும் பெற்றுவர நிச்சயித்திருக்கிறேன். விடை கொடுங்களம்மா. (பாடுதல்)

**சுநீதி** :—என் கண்மணி! நீ எங்கு செல்லப் போகிறாய். என்னை விட்டுப் பிரியவாபோகிறாய். ஐயோ! துக்கமுறுஞ் சமயத்தில் உன் முகத்தைப் பார்த்து சந்தோஷங் கொள்ளும் எனக்குக் கதி என்ன.

மகனே! அலைவாய் நடுவில் திசையின்றித் தவிக்கும் மாலுமியைப்போல் துக்க சாகரத்தில் மூழ்கும் எனக்கு வழி என்ன. மகனே? இரவில் நித்திரை செய்கையில் என் கை சற்று விலகியிருந்தால் மிரண்டு என்னைக் கட்டிக்கொள்வாயே? பால் மணம் மாருச் சிறுவனுயிற்றே. நீ தனியே போதல் முறையோ.

துரு :—அம்மா! பிள்ளைகள் துன்மார்க்க வழியில் சென்ருல் தாய் தந்தைமார்கள் நல்வழி காட்ட வேண்டும். பிள்ளைகள் நன்மார்க்கத்தில் சென்ருல் அதைத் தடுப்பதுமுண்டோ. தாயே! யான் வனஞ்சென்று தவமியற்றி வருவேன்.

சுநீதி :—ஆ! மைந்தா! வனம் புகவா. வேண்டாம். வேண்டாம் மகனே. துஷ்டமிருகங்கள் உலாவும் வனத்திற்குச் செல்லலாகாது. கொடிய மிருகங்கள் உன்னை வருத்தும். கொல்லும். மகனே! தவம் என்ருல் சாமானியமா. முனிவர்கள் தவமியற்றப் பயப்படுகின்றனரே. தவமியற்றப் பக்தி வைராக்கியம் வேண்டுமே. ஐயோ! பூத பிசாசுகள் இடர் விளைக்குமே. அசுரர்கள் வதைப்பரே. என் கண் மணி! உன் எண்ணத்தையொழி. வேண்டாம்.

துரு :—அம்மா! கடுமொழிகூறும் மாந்தர் வாழ் நாட்டிற் கடும்புலிவாழும் காடு நன்றே. என்னை மிருகங்கள் துன்புறுத்தா. அவைகளை யான் என்ன செய்தேன். அசுரர்களும் பயப்படுத்தார். மற்றெவரும் இடர் விளைக்கார். தாயே! தவமும் தவமுடையார்க்

காகும் என்பதையறியீரோ! பூர்வம் என் வயதுள்ள பலர் கொடிய தவமியற்றிப் பேரானந்தம் பெறவில்லையா? இரண்யகசிபுவின் புத்திரரான பிரகலாதாழ்வான் பக்தி மேற்பட்டு மனோவாக்குக்கும் எட்டாத ஆதி மூர்த்தியைத் தொழுது சிறந்த பதவியை யடைந்தது சிறு பிராயத்திலன்றோ? தகப்பனார் இன்னாரென்றறியும் சக்தியில்லாமல் தாய் வார்த்தைகொண்டு தவமியற்றிப் பிரம்ம வித்தையை யறிந்துவந்த சத்தியகாமன் பாலனன்றோ. அதிதி பூசையைச் சரிவர நிறைவேற்றுவதற்குத் தன் தேகத்தைக் கொடுத்துதவின சிறுத்தொண்டர் சிறுவனன்றோ? தாயே! மிருகங்களும் பட்சிகளும் தவத்தால் நற்கதி யடைந்திருக்கின்றனவே. பிறப்பினால் சேஷ்டை குணத்தைக்கொண்ட குரங்கு வில்வத்தைப் பிடுங்கி எறிய, அது சிவலிங்கத்தின் மீதுவிழ அதனால் அக்குரங்கு மறு ஜென்மத்தில் முசுகுந்தனாகப் பிறந்தான் என்று புராணங்கள் கூறுகின்றனவே. கோயில் விளக்கிலுள்ள நெய்யைக் குடிக்கவந்த எலி தன் வாலினால் அவ்விளக்குச்சுடர் மிகுதி பெற்றதற்காக அந்த ஜெந்து மறு ஜென்மத்தில் மகாபலிச் சக்கரவர்த்தியாய்ப் பிறக்கவில்லையா? அம்மா! இம்மாதிரி எண்ணிறந்த ஆன்மாக்கள் தவத்தால் பெருமைபெற்றிருக்க என்னைத் தடுப்பது உங்களுக்கு நீதியோ. தாயே! எனக்கு விடை கொடுங்கள்.

சுநீதி:—மகனே! உனக்கு விதி இப்படியிருந்தால் அதை யான் எப்படி தடுக்கமுடியும். குருவில்லா வித்தை

குறை வித்தை என்பார்களே. உனக்குத் தக்க தீட்சை செய்து மந்திரோபதேசஞ் செய்யும் குருவை யடுக்கவேண்டுமே. துருவா!

துரு :—தாயே! எவ்வுயிருங்காக்க ஒரு வீசனுண்டோ வில்லையோ அவ்வுயிரில் யாரொருவனல்லவோ! (பாடுதல்)

சுநீதி :—(தனியே) இவன் இனி நம்வார்த்தையைக் கேளான். அவன் மனப்படியே விடுவோம். (வெளிப்படையாய்)

மகனே! போய்வா. உனக்கு மங்களம் உண்டாகக் கடவது. (துருவன் தாயை வணங்குதல்).

துரு :—(தனியே) ஆ! இனிப்பயமில்லை. அன்னையார் ஆசி வீண்போகாது. (வெளிப்படையாக) தாயே! சீக்கிரமே சென்று நல்ல வரம் பெற்று வருவேன். நீங்கள் துயரற்றிருங்கள். (மீண்டும் வணங்குதல்) போய் வருகிறேன் தாயே... (நிஷ்கிரமித்தல்)

சுநீதி :—(துருவனைப் பார்த்தவண்ணமே) ஆ! மகனே. உன் பிரிவை எங்ஙனம் ஆற்றுவேன்.

வஞ்சமோ மகனே யுனை மாநிலம்
தஞ்சமாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்சமோ வினி நானுயிர் வாழ்வெனோ
அஞ்சு மஞ்சு மென்னுருயிரஞ்சுமால்.

தெய்வமே! என் மகனுக்கு நீயே துணை. ஆபத்பாந்தவா! அனாதரட்சகா!! நீயே என் பாலனுக்குத் தாய் தந்தை. நீயே குரு. ஏ! திக்குபாலர்

களே! என் மகனைக் காப்பாற்றுங்கள். வன தேவதைகளே! என் துருவனைப் போற்றுங்கள். ஏ! ஆகாயவாணி! என் மைந்தனை இரட்சி. ஆ! பூமிதேவியே. என் குமாரனுக்கு நீயே தாய். துருவனுக்கு ஒன்றும் வாராதபடி காப்பாற்று. மைந்தா ஏ துருவா! துருவா!! துருவா!!!

(சோகித்துக் கீழே வீழ்தல்)

(காட்சி முடிவு)

---

## இரண்டாம் காட்சி

[அயோத்தி நகரிலொரு வீதி]

சோமசர்மன், நித்தியானந்தன் இருபிராம்மணர்கள் உபநிடதமந்திர உச்சாடனஞ் செய்துகொண்டே வருதல்.

**சோம**:—நித்யா! பெண் பிள்ளைக்கு இவ்வளவு துணிகரம் உதவாது. என்ன அநியாயம்.

**நித்**:—சோம! பெண்பிள்ளையின்மீது குற்றமேயில்லை. இளையாள் கலியாணம் எப்பொழுதும் இதுமாதிரிதான். இளையாள் ஆசை மூத்தாளுக்கு அனர்த்தம் என்பதை யறியாயோ.

**சோம**:—என்னதான் இளையாள்மீது ஆசைவைத்தால் தான் என்ன. இப்படியும் ஒரு குழந்தையை, அதிலும் ஜேஷ்ட புத்திரனை, பட்டத்திற் குரியவனை உல்லங்கனஞ் செய்யச் சொல்லுமா?

**நித்**:—போ! நீ இன்னும் பிரபஞ்சமறியாதவன். காமத்

திற்குக் கண்ணில்லை. புருஷன் ஆசாமோகத்தால் மயங்கினவனுயின் ஸ்திரீ என்னசெய்வாள். சகல குற்றங்களையும் செய்வாள். களவாடுவாள். கொலை செய்வாள். பஞ்சமா பாதகங்களைச் செய்வாள்.

**சோம:**—அப்பா! இரண்டு பெண்சாதிக்காரன் பாடு மத்தளத்திற் கொப்பேயாகும்.

**நித்ய:**—சோம! அதற்கென்ன சந்தேகமா. அடுப்பங் கரையே கைலாசம்; அகமுடையாளே சொர்க்க லோகம் என்பதை நீ யறியாயோ.

**சோம:**—நித்ய! துருவன் கானகஞ்சென்றது முதல் நகர் இருப்பைப் பார்த்தையா?

விழுந்தனர் சிலர் சிலர் விம்மி விம்மிமேல்
எழுந்தனர் சிலா முகத் திழிகண்ணீரிடை
அழுந்தினர் சிலர்பதைத் தளகவல்லியின்
கொழுந்தெரி யுற்றெனத் துயரங் கூறுகின்றூர்.

**நித்ய:**—சோம! அதும்மட்டுமா.

மக்களை மறந்தனர் மாதர் தாயரைப்
புக்கிட மறிந்திலர் புதல்வர் பூசலிட்
டுக்கன ரியங்கின ருருகிச் சோர்ந்தனர்
துக்கநின் றறிவினைச் சூறையாடவே.

**சோம:**—துருவனைக் காணும் ஒவ்வொருவரும் அவனை யணுகி வார்த்தையாடாமற் போகார். என்ன குணம். தங்கக் கம்பி.

**நித்ய:**—என்ன அழகு பார்த்தையா. தங்கத்தை உருக்கி வார்த்த பதுமைபோல் என்ன பளபளப்பு. பூர்ண

சந்திரன்போன்ற முகமண்டலம். வில் போன்ற புருவம். கன்னங் கரேலென்ற விழிகள். அடடா மன்மதனும் இவனுக்கு இணையாகான்.

**சோம** :—ஊரெங்கும் துருவன் பேச்சே. பசுக்கள் சரியாகப் பால் கறப்பதில்லை. பட்சிகள் பாடுவதில்லை. குடிகள் சரியாக உண்பதில்லை. எங்கும் கூக்குரலாகவே யிருக்கிறது. திருமகள் அகன்ற நாடு போல் காண்கிறது. ஒளி மங்கிவிட்டது. நாட்டிற்கு வருவதோர் உற்பாதம் உண்டு.

**நித்ய** :—சோம! பாகவதர்களுடைய அபசாரம் வீண் போமா. அம்பரிஷியினிடம் துர்வாசர் பட்டபாடு தெரியாதா. பாகவதர்களுடைய அபசாரம் குலநாசத்தை விளைக்கும். இனி என்ன செய்வது. அயோத்திகர் இருள்மூடியது. துருவன் சென்ற கானகமே நாமுஞ்சென்றால் என்ன.

**சோம** :—நமக்குக் கிடைக்க வேண்டுமே அப்படிப்பட்ட பாக்கியம். பக்தன் இருக்குமிடம் பரமபதம் அல்லவா? நித்ய! நாழிகை ஆய்விட்டது. போவோம் வா.

**நித்** :—சரி. அங்ஙனமே போவோம்.

(இருவரும் நிஷ்கிரமித்தல்)

காட்சி முடிவு.

# மூன்றாங் காட்சி

[ஓர் அடர்ந்த வனம்.]

துருவன் தனியாய்ப் பாதசாரியாய்ப்
பாடிக்கொண்டே வருதல்.

ஓயாத மலரயனே முதலாக வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றொழிந்த மன்னுயிர்க்கும்
நீயாகின் முதற்றாதை நெறிமுறையா லீன்றெடுத்த
தாயாவார் யாவரே தருமத்தின் றனி மூர்த்தி.

என்ன இருள். சம்சாரசாகரத்தில் மூழ்கியிருக்கும் பேதையர்களின்மனம்போல் அஞ்ஞானம் மூடியிருக்கின்றது. திக்குதிசை தெரியவில்லை. ஐயோ! தேனில்வீழ்ந்த ஈயைப்போல, செம்படவர் வலையிலகப்பட்ட கயல் மீனைப்போல, சிறுவர்கள் கையில் சிக்கும் பறவைகளைப்போல, அரசனில்லாத சேனையைப்போல, கொம்பில்லாதகொடி படர்வதுபோல, ஆரணியத்தின் அந்தகாரத்தில் முடவன் ஊர்வதுபோலக் கலங்குகிறேன். சிற்றன்னையின் வார்த்தையை நினைக்க நினைக்கக் கோபம் பொங்குகிறதே. தகப்பனார் என்னைப்பற்றி என்ன ஏங்குகிறாரோ. சிற்றன்னையின் சூழ்ச்சிக்கு இன்னும் ஆளாகி வருகின்றாரோ.

(கர்ச்சனை கேட்குதல்)

ஆ! இதென்ன கர்ச்சனை. கோடை யிடிபோன்ற முழக்கம். துஷ்டமிருகங்கள் உலாவக் கூடுமோ. வனசரங்கள் வட்டமிடுமோ. ஆ! மனம் துடிக்கின்

றது. இதென்னவிந்தை. நம்மை யறியாமல் மனம் ஏன் இங்ஙனம் துடிக்கவேண்டும். சம்சாரத்தை நினைத்தமாத்திரத்தில் சோகமோகாதிகள் மேவிட்டு பயமுதவிய குணங்கள் தோன்றுகின்றனவே. மனம் சஞ்சலப்படுகின்றது. உருவம் விகாரப்படுகின்றது. தெரியாமலா மனதைக் குரங்குக்கு ஒப்பிட்டனர். மனம் ஒன்று வழிபட்டால் சகலமும் வழிபடுமென்று பெரியோர்கள் கூறுகின்றனரல்லவா. (மற்றொருபக்கம் கர்ச்சனைகேட்கல்) ஆ! மீண்டும் இதென்ன. மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது சரியாகவே காணப்படுகின்றது. நற்காரிய மொன்று செய்யப்புகும் மனிதனொருவனுக்கு விக்கினங்கள் பலவிளைவது சகஜமேயன்றோ. ஆபத்பாந்தவா! வைராக்கியமில்லாதமனிதன் செய்யும் காரியம் வீணன்றோ. வழியில் வரும் விபரீதங்களை வேருடன் களைபவனே தீரனன்றோ? இனிநாம் காலதாமதஞ் செய்யொணாது. அதோ! தபஸ்விகளின் மனம்போல் மாசற்று ஓடும் நதியின்கரை தவஞ் செய்வதற்கு ஏற்ற யிடமாயிருக்கும். நல்ல இராச்சியத்தில், தர்மம் ஓங்கும் தேசத்தில், சுபிக்ஷமாயிருக்கக் கூடிய இடத்தில், தன்னாலும் பிறராலும் உபத்திரவம் வரக்கூடாத வசதியில் தவஞ் செய்ய வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. நாம் சித்தஞ் சலியாது வைராக்கியத்துடன் தபஸை நடத்துவோம். பகவானே! நீயேகதி. உன்னையே நம்பியிருக்கிறேன். (பாடுதல்)

நீயே யுலகெல்லாம் நின்னருளே நிற்பனவும்
நீயே தவத்தேவ தேவனும்—நீயே
எரிசுடரும் மால்வரையு மெண்டிசையும் அண்டத்
திரிசுடருமாய் விளுவ.

(பாடிக்கொண்டே நதிக்கரை செல்லுதல்.)

(இந்திரன் பிரவேசம்.)

பாலனுயினும் நல்ல மனேதிடங் கொண்டவன். இவன் தவமியற்றிச் சித்திபடைவானுயின் இந்திர பதவியடைய விரும்பினுலும் விரும்புவான். வெள்ளம் வருமுன் அணைகோல்வது முக்கியம் போல, இவன் கொடிய தவஞ் செய்யாவண்ணம் தவத்திற்கு விக்கினஞ் செய்யவேண்டும். நல்ல வரப்பிரசாதம்பெற்றுனுயின் நம் தேவபதவியை யடையக்கூடும். நான் ஒருவன் தேவபதவியை யடைவதா. இப்பொழுதே பூதகணங்களை விடுத்துப் பாலனைப்பலவாறு பயமுறுத்தித் தவஞ்செய்யாமல் தடுப்போம். இனி காலதாமதஞ் செய்யலாகாது. வஜ்ஜிரதந்தா!

(வஜ்ஜிரதந்தன் பிரவேசம்)

வஜ் :—ஆ......... ஸ்வாமி.

இந் :—தந்தா! நீ பூதங்களுக்கரசனுயிருப்பதினுல் உன் கணங்களைக்கொண்டு அந்நதிக்கரையில் தவஞ்செய்யும் பாலனைப் பயப்படுத்தி அவன் தவஞ்செய்யாவண்ணம் தடுத்து வருவாய்.

வஜ :—(ஆத்மகதமாய்) எப்பொழுதும் இவனுக்கு இதே வேலை. இந்திரன் பதவி என்று சொல்வதே தவிர,

இவனுக்குள்ள மனச்சஞ்சலம் சாமானிய நரனுக்குக்கூட யிராது. நல்ல அந்தஸ்துள்ளவர்களுக்கு மன அமைதி என்பது எள்ளளவுங் கிடையாது. (பகிரங்கமாக) சுவாமி! உங்கள் உத்திரவு படியே. ஆனல்..........ஒன்று.

இந்தி :—தந்தா! அதென்ன.

வஜ் :—ஸ்வாமி! பாலனை மிரட்டுவதற்குப் பூதகணங்களெல்லாம் வேண்டுமா?

இந் :—தந்தா! ஆம். பாலன் மூர்த்தியில் சிறியவனுயினும் கீர்த்தியில் மிக்கப் பெரியவன். அவனிடம் மிக்க ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

(நாரதர், வீணையுடன் பாடிக்கொண்டே வருதல்)

கஞ்சன நயன மஞ்சுள பாஷா புவனகபூஷா புருஷோத்தமா
ருக்மணிதீரா மாநுஷலீலா திவ்ய கபோலாங்ருத பரிபாலா
அசுர பயங்கர அபயப்ரபாகர அண்டஜ வாகன புண்டரீக
சாரங்கராஜா பூததயபரா ஆர்த்த சனரக்ஷக பஞ்சாயுத தரனு.

(ஒரு புறமாய்) சரி. இன்று யாருக்கு அனர்த்தமோ தெரியவில்லை. இருவரும் ஒன்றுசேர்ந்து இருக்கிறார்கள். இந்திரா!

இந் :—(இந்திரன் திடுக்கெனத் திரும்பிப்பார்த்து நமஸ்கரித்தல்) முனிதிலகா! நமஸ்கார்ரம்.

நார :—என்ன விசேஷம். வஜ்ஜிரதந்தன் வந்திருக்கிறான். (வஜ்ஜிரதந்தன் நமஸ்கரித்தல்)

இந் :—நாரதரே! ஒன்றுமில்லை. சுவாயம்பு மனுவின் குமாரனுகிய உத்தானபாதன் மகன் துருவன் உயர்

பதவிவேண்டி கொடிய தவம் புரிகிறான். அத்தவத்தை யழிக்க வஜ்ஜிரதந்தனை இங்கு அழைத்தேன்.

வஜ் :—ஆம். ஸ்வாமி.

நார :—இந்திரா! இது என்ன சூழ்ச்சி. பால் மணம் மாறாச் சிறுவனுக்கு இப்படியும் இடர்விளைக்க நினைப்பையோ, சிசுவதை செய்யத் துணிந்தாயே. உன் பதவி என்ன. தேவர்களுக்குத் தேவனாயிருக்கும் நீ இத்தகைய கொடிய காரியத்தைச் செய்ய ஏவுகிறாயே. உனக்கு இப்பதவி ஏற்கவே ஏற்காது போ.

இந் :—முனிபுங்கவா! நரர்கள் தேவபதவியை யடையக் கூடாதென்பதைக் கொண்டு இவ்வாறு செய்தேன்.

நார :—இந்திரா! அப்பாலனை வதைக்க உன்னாலாகுமா. உன்னைப்படைத்த நான்முகனாலாகுமா. திரிமூர்த்திகளால்தான் ஆகுமா? ஐயோ! அப்பாலனை என்னவென்று எண்ணுகிறாய். ஏ! குலாந்தக! கேள். அப்பாலன் சைதன்னிய ஸ்வரூபி. நிஷ்களங்க மூர்த்தி. பாகவதோத்தமன். துவந்தங்களற்ற புனித சிகாமணி. புரந்தரா! அப்பாலனை ஆயுதங்களால் வெட்ட முடியாது. காற்றினால் உலர்த்த முடியாது. அக்கினியினால் எரிக்க முடியாது. மழையினால் நனைக்க முடியாது. அது ஆத்மாராமம். உயர்ந்த உத்தம ஜாதிக்கும் மேலானது. (பாடுதல்)

ஆதித்தன் குலமுதல்வன் மனுவினையா ரறியாதார்
பேதித்த வுயிரனைத்தும் பெரும்பசியால் வருந்தாமற்
சோதித்தன் வரிசிலையா னிலமடந்தை முலைசுரப்பச்
சாதித்த பெருந்தகையு மிவன்குலத் தவராதிகாண்.

இன்னுயிர்க்கு மின்னுயிரா யிருநிலங் காத்தாரென்று
பொன்னுயிர்க்குங் கழலவரை யாம்போலும் புகழ்கிற்பாம்
மின்னுயிர்க்கு நெடுவேலா யிவர்குலத்தோன் மேற்பரவை
மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினனால்.

இந் :—உத்தம! 'சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடமை.'' தெரியா மற் செய்த காரியத்திற்கு மன்னித் தருளும்: ஸ்வாமி! பாகவத அபசாரம் நீங்கத் தீர்த்த யாத்திரை செய்து வருவேன். நாரத திலகமே (நமஸ்கரித்தல்) என்னை அனுக்கிரகியுங்கள்.

நார :—புரந்தரா! அப்பாகவத சிகாமணியைப் பிரதட்சணம் செய்வாயாகில் உன்னைப் பாபம் ஒன்றும் அணுகாது. போ. நீகோரியகாரியம் சித்திபெறும். போய்வா.

இந் :—அப்படியே ஸ்வாமி. (நிஷ்கிரமித்தல்)

வஜ் :—(ஒருபுறமாக) ஆத்திரக் காரனுக்கு புத்தி மட்டு என்பது இந்திரனிடத்தில் சரியாகத்தான் இருக்கிறது. இவனை யார் பொறுமைப்படச் சொன்னார்கள். கடைசியாக இப்படியேன் திண்டாட வேண்டும். பொறுமையால் வருந் தீங்குகள் பல உள. இனியாகிலும் பொறுமையற் றிருப்பானோ யிவன். ஏது. எனக்கு நம்பிக்கையில்லை. அவரவர்கள் வந்தவழி அவரவர்களுக்கு. நம் வழியை நாடி நாம்

செல்வோம். (நிஷ்கிரமித்தல்)

நார :—பிள்ளையாகப் பிறந்தால் இப்படியல்லவோ யிருக்க வேண்டும். என்ன குணம். என்ன தவம். ஆ. மானத்தில் என்ன திருஷ்டி. அடடா. சுநீதியின் பாக்கியமே பாக்கியம். 'எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்.' பாலன் கொடிய'தவமியற்றுகிறான். பூத பிசாசுகள் பயமுறுத்தக் கூடும். நாம் அவனிடஞ் சென்று மந்திரோபதேசஞ் செய்வோம். ஏ! முகுந்தா! மாதவா!! ஹரி ஹரி!!!

(பாடிக்கொண்டே நிஷ்கிரமித்தல்)

சாஸ்வத தர்மம் கேசவ பிரம்மம் தாரகமந்திரம் ஜகதீசா
கார்முகிவர்ண குண்டல பூஷண நிர்மல சித்த மனோகரா
உத்தம சாஸ்திரம் மங்கள சூத்திரம் புவன பவித்திரம் பரந்தாமா
மாயாலீலா ருக்மணிலோலா நந்த முகுந்த வைகுண்டவாஸா.

(காட்சி முடிவு.)

## நான்காம் காட்சி.

### [நதிக்கரை]

துருவன் பத்மாசனத்துடனிருந்துகொண்டே பாடுதல்.

வாடினேன்வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி யிளையவர் தம்மோ
டவர்தரும் கலவியே கருதி
ஓடினேனோடி யுய்வதோர் பொருளா
லுணர்வெனும் பெரும்பதந் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

பகவானே! குரு உபதேசமில்லாத தவம் பயன் படாதென ஆகமங்கள் கூறுகின்றனவே. குருப தேசஞ் செய்வார் இவ்வனத்தில் இருப்பரோ. ஏ! கஜேந்திர கருணாபாரிணு ஏ! ஜகத்திரய குரோ (பாடுதல்)

(நாரதர் வீணையுடன் பாடிக்கொண்டே வருதல்)

தாயாய் மகவாய்த் தனியாய்ப் பலவாய்
நீயா யானுய் நிற்கும் ஒருவன்
மாயாமயனுய் மாய்கைக் கணுக
வாயாதவனேன் மனநீங்கிலனே.

முகமண்டலம் எவ்வளவு காந்தி. என்னபக்தி திட வைராக்கியம். அடடா. (சமீபத்தில் அணுகி)பாலா!

**துருவ** :—(கண்விழித்து) ஸ்வாமி............நீங்கள் யார்?

**நார** :—(ஆத்மகதமாய்) என்ன வினயம். என்ன பிரிய வசனம். (பகிரங்கமாக) துருவ! என் பெயர் நாரதர் என்பார்.

**துரு** :—திரிலோக சஞ்சாரி நாரத மகாமுனியா! (நமஸ்க ரித்தல்) (பாடுதல்)இன்றே யான் தன்னியனுனேன். ஸ்வாமி..............................

**நாரத** :—உன் மனேபக்குவததை யறிந்தேன். என்று ஹும் மனம் சஞ்சலப் பதார்த்த மானதினுல் உனக்கு உபதேசம் செய்யவந்தேன்.

**துரு** :—ஸ்வாமி! கும்பிடப்போனதெய்வம் குறுக்கே வந்தாற்போல குருவை நாடியிருந்த மனம் குரு வையே பிரத்யட்சத்தில் காண்கின்றது. ஸ்வாமி.

நாரத :—(துருவனைக் கிட்டழைத்து அவன் காதில் உப தேசஞ் செய்தல்)

பாலா! அறிந்தாயா. எல்லா காமங்களும் நிறைந்ததாய், அத்யாத்மிகம், ஆதிபூதம், ஆதிதைவதம் என்கிற ஜகத்திற்கு ஸ்திதிஹேதுவாய், எல்லா யாகங்களுக்கும் பலனாய், சம்சார சாகரத்தின் கரையாய், ஸ்துத்யமாய், பெரியதாய், உத்தம கதியாய், உத்தம ஸ்திதியாயிருக்கிற பரமபதத்தைச் சிந்தித்து மகாதீரனான நீ, அநித்யங்களான காம பேதங்களை விட்டுப் பரபிரம்மத்தையே தியானி.

துரு :—ஸ்வாமி! பரப்பிரம்ம ஸ்வரூபம் எப்படி?

நார :—துருவ! தர்மத்தைக் காட்டிலும் வேறானதும் அதர்மத்தைக் காட்டிலும் வேறானதும் இந்த காரியகாரணத்திலும் வேறானதும், எதிர்கால நிகழ்கால இறந்தகாலங்களைக் காட்டிலும் வேறானதும், மனோவாக்குக்கு எட்டாததுமான எந்தவஸ்துவை எல்லாவேதங்களும் கூறுகின்றனவோ அந்த பிராப்யஸ்வரூபத்தை ஓம் என்றறி. இந்தப்பிரணவமே சிரேஷ்டம். இந்தப்பிரணவமே பிரம்மம். இந்தப் பிரணவத்தையே யறிந்தால் எவன் எதை விரும்புகிறானோ அவன் அதை அடைகிறான்.

துரு :—ஸ்வாமி! பிரணவத்தால் பரப்பிரம்ம தரிசனம் உண்டாகுமா?

நாரத :—துருவ! ஓம் என்னும் அக்ஷரமானது பரமாத்மாவை நேரே சொல்லுகிறது. இவ்வக்ஷரத்தைப் பஜிப்பதினால் அப்பரமாத்மா பிரசன்ன மாகிறார்.

**துரு:**—ஸ்வாமி! (நமஸ்கரித்தல்) உணர்ந்தேன். உணர்ந்தேன். (கண்ணை மூடிக்கொண்டே ஸ்தோத்தரித்தல்)

தாய் தன்னை யறியாத கன்றில்லை தன் கன்றை
யாயுமறியும் முலகின்று யாகினைய
நீ யறிதி யெப்பொருளு மவையுன்னை நிலையறியா
மாயையிது வென்கொலோ வாராதே வரல்லாய்.

**நார:**—நாம் வந்த காரியம் முடிந்தது. பாலன் பக்குவமடைந்து விட்டான். இவன் அழியாப் பெயர் பெறுவான். (பாலனைப்பார்த்து இருகைகளையும் மேல் தூக்கி ஆசீர்வதித்தல்)

உனக்கு மங்களமுண்டாகக் கடவது. சீக்கிரமே பரந்தாமனைக் காண்பாய். சரி. நாம் போவோம். (பாடிக்கொண்டே நிஷ்கிரமித்தல்.)

**துரு:**—பரந்தாமா! தீனதயாளு! அடடா என்ன சோதி. (கண்விழித்துப் பார்த்து) நாரதா! ஸ்வாமி! ஓகோ! நம்மைவிட்டு நீங்கினார்போலும். ஏ! பகவான். பிரணவஸ்வரூபி! ஆனந்த மூர்த்தி!! கருணாபாரிணா!!! (ஆனந்தம் பெருகிக்கொண்டே ஆசனத்தில் உணர்வின்றி வீற்றிருத்தல்.)

குலந்தருஞ் செல்வந்தந்திடு
மடியார் படுதுயராயினவெல்லாம்
நிலந்தருஞ் செய்யும் நீள்விசும் பருளு
மருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரு மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்.

காட்சி முடிவு

## ஐந்தாங் காட்சி.

[நதி தீரம்.]

துருவன் ஸ்ரீமந் நாராயணனை ஸ்தோத்தரித்தல்.

கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா தீ
நாற்றமும் சாரா வகையறிந்தேன்—ஆற்றங்
கரைக் கிடக்கும் கண்ணன் கடல் கிடக்கும் மாயன்
உரைக்கிடக்கு முள்ளத் தெனக்கு.

எனக்காவ ரொருவரே எம்பெருமான்
தனக்காவான் தானே மற்றல்லால்—புனக்காயா
வண்ணனே யுன்னைப் பிறரறியார் என்மதிக்கு
விண்ணல்லா முண்டோ விலை.

தேவராய் நிற்கு மத்தேவும் அத்தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் யாவராய்
நிற்கின்ற தெல்லாம் நெடுமாலென் றோதாதார்
கற்கின்ற தெல்லாம் கடை.

பக்தவத்ஸலா. புண்டரீகநாதா. சரணம் சரணம்.

(ஸ்ரீமந் நாராயணன் கருடவாகன ரூடராய்த் தரிசனங் கொடுத்தல்)

ஸ்ரீமந் :—துருவா! மெச்சினேன் உன் பக்தியை. இவ்வயதில் இதுகாறும் உன்னைப்போல் பக்தி செய்தவர்களில்லை. உனக்கு வரங்கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். உனக்கு வேண்டுவது என்ன.

துரு :—அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயக! பகவத் பக்தி பாகவத பக்தி என்றும் நீங்காமலிருக்க வேண்டுகிறேன்.

**ஸ்ரீமந் :**—பிள்ளாய்! அப்படியே கொடுத்தேன். இன்னும் என்ன தேவை.

**துரு :**—வாசுதேவா! நான் வந்த கோரிக்கை ஈடேற வேண்டும்.

**ஸ்ரீமந் :**—அப்படியே. துருவா! இனி வானுலகில் உனக்கென்றே தனிபதம் ஒன்றும் சிருஷ்டித்தோம். சந்திர சூரியர்கள் அழியினும் உன் பதம் அழியாது. பிரபஞ்சம் பிரளயத்தில் மூழ்கி அழியினும் உன் பதம் அழியாது. அண்டங்கள் உருண்டு சிதறினும் உன் பதம் சிதறாது. துருவா! உன் பெயரினாலேயே இனி அப்பதவி வழங்கட்டும். உனக்கு சர்வாபீஷ்டமுண்டாகக் கடவது.

(மறைதல்)

**துரு :**—(ஸ்தோத்தரித்தல்) இந்நாளே நன்னாள். நாம் பூர்வ ஜென்மத்தில் செய்த தவப்பயன் பலன் அடைந்தது. இனி அயோத்தி சென்று தாயை வணங்கி அவள் அகமகிழச் செய்வோம்.

(இந்திரன் மீண்டும் பிரவேசித்தல்)

**இந் :**—துருவா. உன் பக்தியை யறியாமல் உனக்கு அபாராதஞ் செய்தேன். என்னை மன்னி.

**துரு :**—ஐயா! நீங்கள்யார். யான் அறியவில்லையே.

**இந் :**—என் பெயர் இந்திரன். நீ இயற்றிய தவத்தை யழிக்க முயன்றேன். நாரதரால் உன் மகிமை யறிந்தேன். என்னை க்ஷமிப்பாய்.

**துரு :**—இந்திரா! எல்லாம் ஈசன் செயல்.

இந் :—துருவா! நான் செய்த அபராதத்திற்குச் சாந்தி யாக இதோ உனக்கு நினைத்த மாத்திரத்தில் தேவ லோகஞ் செல்லும் வரத்தைக் கொடுத்தேன். துருவா! (நிஷ்கிரமித்தல்.)

துரு :—பழம் நழுவிப் பாலில் வீழ்ந்தவாறுபோலாயிற்று. நற்காலம் வரின் நன்மைகள் அடுக்கடுக்காய் வரும். துன்பம் வருங்காலத்தில் துன்பங்கள் அடுத்தடுத் துவரும். பகவானே. உன் கருணையல்லவா. நாழிகையாய்விட்டது நாம் செல்வோம்.

(நிஷ்கிரமித்தல்.)

(காட்சி முடிவு.)

# மூன்றும் அங்கம்.

## முதற் காட்சி.

[அயோத்திநகர்—உத்தானபாதன்
சுநீதியின் அந்தப்புரத்திலிருத்தல்]

உத்:—பிள்ளையைப் பறிகொடுத்து இன்னும் உயிர் வாழும் எனக்கு மறுமையில் என்ன கதியுண்டாகுமோ? ஐயோ! புத்திரசோகம் உயிரை நீக்கும் என்பார்களே. என்மட்டில் ஒன்றுமில்லாமல் மேனி இளைக்காமலிருக்கின்றதே. கல்லினுங் கடின நெஞ்சத்தவனாயினேன். கானகத்தில் என் அருமை மைந்தன் என்னவாயினனோ. புருஷன் சொல் தட்டாத சுநீதி என்னவாயினளோ. மைந்தனைப்பிரிய சகியாது உயிர் துறந்தனளோ. தெய்வமே. சுருதியின் பொல்லாத வார்த்தைக் கிணங்கி சுநீதிக்குப் பலவாறு பொல்லாங்கு இழைத்தேனே. அவள்பால் யான் எங்ஙனம் செல்லக்கூடும். குற்றவாளியாயிருக்கும் எனக்கு அவள்முன் எப்படி என் கால் நிற்கும். எந்த முகத்தை வைத்துக்கொண்டு அவளிடம் யான் செல்லக்கூடும். சர்வவிதத்திலும் அவளுக்குத் தீங்கிழைத்த பாவியானேனே. ஆ! சுநீதி! இத்தகைய பொல்லாப்புடன் உயிர்வாழ்வதிலும் உயிர்

துறத்தல் நலம். இத்தகைய சஞ்சலத்துடன் இருப்பதைக்காட்டிலும் இக்கட்கத்திற்கு இரை யாவேன். (என்று கூறிக்கொண்டே கட்கத்தை எடுத்தல்) தெய்வமே! இன்றோடு சூரியகுலம் அழிந்தது. உத்தானபாதன் மாண்டான். மனு மரபு மறைந்தது. (கட்கத்தை மார்புக்குச் சரியாகக் கொண்டு போகுந்தருவாயில் சுநீதி ஓடிவந்து கையைப்பிடித்தல்.)

**சுநீதி** :— (உள்ளிருந்து ஓடிவந்து) நாதா! நாதா!! இதென்ன சாகஸம். சாகஸபுத்தி ஸ்திரீகளுக்கன்றோ இயற்கை. க்ஷத்திரியகுல வேந்தனாயிருந்து இத்தகாத தொழிலைச் செய்ய எத்தனிக்கலாமா? க்ஷத்திரியர்கள் தற்கொலை புரிவதுண்டோ. அது அவர்களுக்கு அடுக்குமோ? இரணகளத்தில் தர்ம யுத்தஞ் செய்யவிருக்கும் தீரன் தற்கொலை புரிந்தால் அவனுக்கு இம்மையில் இகழ்ச்சியும் மறுமையில் நரகமும் ஏற்படுமன்றோ? நாதா! பதறுங்காரியஞ் சிதறுமல்லவா? ஐயோ! எங்களுக்கு மாங்கல்ய பிச்சை கொடுங்கள். வீணில் எங்களை விட்டுப் பிரியாதீர். (நாரதர் சந்தடிசெய்யாமல் வருதல்.) என்ன. கெவுளி பேசுகின்றது. நற்சகுனங் காண்கின்றது. பகவானே! ஆழ்ந்த சமுத்திரத்தில் அவதிப்படுபவர்களுக்குத் தப்பும் வழியுமுண்டோ?

**நாரதர்** :—(முன் வந்து) உண்டு. அம்மணி. நல்வழியுண்டு. உங்கள் இடர் தொலைந்தது.

**சுநீதி** :—தவசிரேஷ்டா! நற்காலமுண்டோ.

**நாரத** :—சுநீதி! துருவன் நல்ல வரப்பிரசாதம் பெற்று வருகிறான்.

உத் :—ஆ! நாரதா! என் மைந்தன் துருவனா. வருகி றனா.

நார :—மன்ன! மனிதர்களால் இயற்ற முடியாத கொடிய தவத்தைக்கொண்டு பகவான் ஸ்ரீமந் நாராயணனைக் கண்டு சேவித்து நல்ல பலன்களைப்பெற்றுப் பாலன் துருவன் பாக்கியசாலியாய்த் திரும்பி வந்துகொண் டிருக்கிறான்.

உத் :—உயிர் துறக்குந் தருவாயிலிருக்கும் ஒருவனுக் குப் பிராணதானங் கொடுத்து சமய சஞ்சீவியாயி ருக்கும் உமக்கு என்ன கைம்மாறு செய்யப் போகி றேன். நாரதா!

(துருவன் வருதல்.)

சுநீதி :—நாதா! நம் கஷ்டமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிற்று. அதோ! துருவனும் வருகி றான். அப்பா, துருவா! (என்று கூறிக்கொண்டே துருவனைக் கட்டியணைத்து உச்சிமோர்ந்து ஆனந்த பாஷ்பம் சொரிதல்)

துரு :—தாயே! (நமஸ்கரித்தல்) தந்தாய்! (நமஸ்கரித்தல்)

உத் :—இதுவன்றோ ஆநந்தம். கண்ணிழந்தவன் மீண் டும் கண்கொண்டதுபோலானேம்.

துரு :—தந்தாய்! யான்பெற்ற ஐஸ்வர்யத்திற்கு இவரே (நாரதரைச் சுட்டிக்காட்டி) காரணம் இவரே என் குரு. இவரே எனக்குத் துணைவர். சுவாமி! (நாரதரைப்பார்த்து) நாரதபகவானே. (நமஸ்கரித்தல்).

நார :—மன்ன! துருவன் நல்ல சத்புத்திரன். நன்றாய்க்

கனிந்த பழம். இனி துருவனுக்குப் பட்டங்கட்டி ஆநந்தங் கொள்ளுங்கள் யான் போய் வருகிறேன்.

உத் :—நாரத! யாங்கள் உமது அடைக்கலம். உமது உத்திரவுபடியே துருவனுக்குப் பட்டங்கட்டி விட்டு யான் தவஞ்செய்யக் கானகஞ் செல்வேன். (நாரதர் நிஷ்கிரமித்தல்) காதலி! யாம் போவோமா? மந்திரி! (மந்திரி வருதல்) துருவனுக்குப் பட்டாபி ஷேகஞ்செய்ய நாள் குறித்துத் தக்கபடி ஆயத் தஞ்செய். தேசதேசங்களுக்கு ஓலையனுப்பு. நாடெங்கும் பறைசாற்றி நகரமாந்தர்கள் கொண் டாடச்செய். மகனே, வா! யாம் போவோம்.

(அனைவரும் நிஷ்கிரமித்தல்).

(காட்சி முடிவு)

## இரண்டாங் காட்சி.

### [துருவ பட்டாபிஷேகம்].

வசிஷ்டர், உத்தானபாதர், சுநீதி, ரிஷிகணங்கள், மந்திரி முதலானோர்.

வசி :—துருவ! இவ்வக்கினியைச் சுற்றிப் பிரதட்ச ணஞ்செய்து பகவானைத் தியானித்துச் சிம்மா தனத்தின்மீது வீற்றிருப்பாய்.

துரு :—குருதிலகா! அங்ஙனமே (பிரதட்சணஞ் செய்து சிம்மாதனம் ஏறுதல்).

(உடனே வாத்தியகோஷங்கள் முழங்கு கின்றன. மந்திரங்கள் ஒலிக்கின்றன).

வசிஷ் :—(மந்திர உச்சாடனத்துடன் மணி முடி எடுத்துத் துருவன் சிரசில் அணிதல்).

விஜயீபவ! விஜயீபவ!! சமஸ்த சங்மங்களானு சந்து.

அனைவரும் :—ஜயவீபவ! ஜயவீபவ!! துருவராஜா.

(தேவர்கள் மலர் தூவல்).

(காட்சி முடிவு).

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.